# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, யூன்- 2017
# Term Examination, June - 2017

| இந்து சமயம் | தரம் :- 13 (2017) | புள்ளித்திட்டங்கள் |
|---|---|---|

## பகுதி – I

| | | | | |
|---|---|---|---|---|
| 01) 5 | 11) 4 | 21) 4 | 31) 1 | 41) 4 |
| 02) 5 | 12) 2 | 22) 1 | 32) 4 | 42) 5 |
| 03) 5 | 13) 5 | 23) 5 | 33) 3 | 43) 4 |
| 04) 5 | 14) 3 | 24) 5 | 34) 4 | 44) 3 |
| 05) 4 | 15) 3 | 25) 5 | 35) 1 | 45) 5 |
| 06) 4 | 16) 4 | 26) 5 | 36) 3 | 46) 5 |
| 07) 3 | 17) 4 | 27) 5 | 37) 2 | 47) 5 |
| 08) 5 | 18) 1 | 28) 4 | 38) 1 | 48) 1 |
| 09) 4 | 19) 5 | 29) 4 | 39) 1 | 49) 5 |
| 10) 4 | 20) 3 | 30) 4 | 40) 1 | 50) 4 |

(50x2=100 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

## பகுதி- II

01. அ) விரதமானது மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம் வாக்கும் காயம் ஆகிய மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விசேடமாக வழிபடல் ஆகும்

ஆ) நவராத்திரி, வரலக்சுமி, சாவித்திரி விரதம், சந்தோஷித மாத விரதம்

இ) நவராத்திரி விரதம் புரட்டாதி மாதத்தில் வரும் அமாவாசையை அடுத்து வரும் பிரதமை தொடக்கம் நவமி ஈறாக ஒன்பது நாட்கள் அனுஷ்டிக்கப்படும்.

நவம் என்பது ஒன்பது, இராத்திரி என்பது இரவு என்பதால் ஒன்பது இராத்திரிகள் அனுஷ்டிக்கப்படும்.

( 1-3 ) துர்காதேவி சொரூபமாகவும் சதுர்த்தி முதல் மூன்று நாளும்

( 4-6 ) இலட்சுமி உருவாகவும் சப்தமி முதல் இறுதி மூன்று நாளும்

( 7-9 ) சரஸ்வதி வடிவமாகவும் பாவித்து கும்பம் முதலானவற்றில் ஆகாவனஞ் செய்து பூசை செய்வர்.

நவராத்திரி விரத நியதிகள்

- புரட்டாதி மாத வளர்பிறை பிரதமைத் திதியில் கும்பம் வைத்து நவமி வரை பூசை செய்தல் வேண்டும்.
- வீடு, ஆலயத்தில் கொலு வைத்தல்.
- முதல் எட்டு நாளும் பகல் உணவின்றி இரவில் பூசை முடிந்த பின் பலகாரம், பால், பழம் முதலியவற்றை உட்கொள்ளல்.
- மகாநவமியன்று உபவாசம் இருத்தல்.
- விரதநாட்களில் தேவி மகாத்மியம் அபிராமி அந்தாதி, துர்க்கா அனுஷ்டகம், இலக்குமி தோத்திரம், சகலகலா வல்லிமாலை முதலியற்றைப் பாராயணம் செய்தல்.
- தசமதிதியில் பாறணை செய்தல் வேண்டும், ஒன்பது வருடம் தொடர்ந்து அனுஷ்டிக்க வேண்டும்.

  கும்பம் வைத்தல், கும்பம் சொரிதல், கொலுவைத்தல், கன்னிவாழை வெட்டல் என்பன இவ்விழாவில் சிறப்பிடம் பெறுகின்றன.

  மகாநவமி நாளின் சிறப்புக்கள் விஜயதசமி நாளின் சிறப்புக்கள் இடம்பெறல் வேண்டும்.

ஈ) ஒழுக்க விழுமியங்கள்

மனதில் அமைதி புனிதம் குடிகொள்ளல்

இறைவனுக்குத்தன் பக்தியை அர்ப்பணித்தல்

அவனுடன் உறவு கொள்ள முயற்சித்தல்

புனிதத்தன்மை

அகபுறத்தூய்மை

இறைவனுடன் ஒன்றுபடல்

(4+2+10+4 புள்ளிகள்)

02. அ)

| ஆண் தெய்வம் | பெண் தெய்வம் |
|---|---|
| ஐயனார் | மாரியம்மன் |
| அண்ணமார் | கண்ணகி |
| பெரிய தம்பிரான் | பிடாரி |
| சுடலைமான் | கொத்தி |
| வீரபத்திரர் | பேய்ச்சி |

ஆ) முல்லைத் தீவு, மட்டுவில், நயினாதீவு, மிருசுவில், அளவெட்டி, திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, காரைதீவு, கறிகாமம், பட்டிப்பாலை

இ) கண்ணகி சிலப்பதிகாரத்தின் பிரதான கதாநாயகி, அவள் தெய்வமாக வழிபடப்படல்.

கண்ணகி சிவசக்தியின் அம்சமாகவும் காளியின் அவதாரமாகவும் ஆவாள். கண்ணகிவழிபாடு கி.பி 2ம் நூற்றாண்டில் கண்ணகிக்கு விழா எடுத்தமை கஜபாகு மன்னன் விழா எடுத்தமையும் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டமையும்.

வழிபாட்டின் நோக்கம் :- ஆகமம் சாரா வழிபாடு, வழிபடப்படும் காலம் என்பவற்றுடன் கல்யாணக் கால் வெட்டுதல், விநாயக் பான எழுந்தருளப் பண்ணல், திருக்குளிர்தி ஆடல் கண்ணகி அம்மன் சடங்கில் இடம்பெறும் நேர்த்திக்களான காவடி எடுத்தல் அங்கப்பிரதட்சணம் செய்தல், பாளை விற்றல், பிள்ளை விற்றல் மடை கொடுத்தல் பட்டாடை, அங்க அடையாளங்கள், தென்னம் பிள்ளை மாடு, சூடு, கோழி, பிள்ளைத் தொட்டில் முதலான நேர்த்திகள் ஆகும்.

ஈ) மழை பெய்தல், நாடு செழித்தல், நோய் போதல், பட்டி பெருகுதல் பயனீக்கம்.

( 3+3+10+4 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

03. அ) சங்கரர் ஏற்றுகொண்ட பிரமான நூல்கள்.

பிரஸ்தானத் திரயமாகிய உபநிடதம், பிரம சூத்திரம், பகவத்கீதை,

சங்கரர் எழுதிய உரை – சங்கர பாஷ்யம்

உபநிடத மகாவாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு தமது கொள்கையை நிறுவுகின்றார் சங்கரர் அறுவகை பிரமாணங்களையும் ஏற்றார். சங்கரரின் ஆசிரியர் கோவிந்தன் ஆசிரியராகிய கௌடபாதர் எழுதிய மண்டுக்கிய காரிகை என்ற அரிய நூலும் சங்கரரது அத்வைதத்திற்கு அடிகோலியது என்பது அறிஞர் கருத்து.

ஆ) அவரது அத்வைத கோட்பாட்டில் பிரம்மம் உள்பொருள் ஒன்றே உண்மையானது. ஒழுமைக் கொள்கையை நிரூபித்தல் ஆன்மாவும் பிரம்மமும் ஒன்றே கேவல அத்வைதம் பிரம்ம பரிபூரண வாதம் ஒருமை வாதம், ஏகான்ம வாதம் போன்ற பல பெயர்கள் உண்டு. பிமம்மம் மட்டுமே உண்மை. அநாதியானது அந்தமற்றது. அழிவில்லாதது எங்கும் செறிந்த நீங்க மற நிறைந்திருப்பது பிரம்மம் எதனைக் கோன்றதாகவும் இல்லையெனக் கூறலாமேயொழிய எதுவாக உள்ளது என விளங்க வைப்பது கடினம் பரம்மத்திற்கு 2 நிலைகள் கூறப்படுகின்றன.

நிர்க்குணநிலை

சகுண நிலை

ஒரேயொரு மூலப்பொருளாகியுள்ள பிரம்மம் பல சிவன்களாகின்றது ஆன்மாவே பிரம்மம் தத்துவமஸ, அகம் பிரஸ்மாஸ்மி, சோகம் அஸ்மி எனும் உபநிடத மகாவாக்கியம் இதங்கு அடிப்படையாகின்றன.

சங்கரர் அத்வைக் கொள்கையின் படி உலகம் என்பது உண்மையல்ல. அது தோற்றம் என்பதாகும். உலகத்தின் உண்மையற்ற நிலை என கூறுவதற்குரிய தேவையும் காரணங்களும் பற்றிய விளக்கம் உலகம் நிலையற்றது, பொய்யானது, விவாதவதாக் கோட்பாடு கயிறு பாம்பாக மாறித் தெரியும் காட்சி மாயை கோட்பாட்டின் மூலம் பிரம்மமே உலகத்தை தோற்றுவிக்கின்றன. என்கிறார் மாயை என்பதற்கு பலவிதமான பொருள் கொள்வார். மாயையைச் சொல்லாமல் விளக்கமுடியாது அது அநிர்வசனீயம் எனப்படும்

இ) ஆன்ம விடுதலைக்கான வழிமுறைகள்

சங்கரர் ஞானத்திற்கு முதன்மை அளிக்கின்றார். ஆன்மா அவித்தையாகும். அறியாமையிலிருந்து வழிபட்டு தன்மை பிரம்மமென உணர்தலே விடுதலையாகும். தம்மை பிரம்மமாக உணர்த்துவதற்குரிய வழிமுறைகளாக பிரம்ம ஞானத்தைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் ஆகியன முக்கியமானவை ஞானத்தைப் பெறுவதற்கு வழிபாடு, நல்லொழுக்கம் என்பனவும் அவசியம் தம்மை பிரம்மமென உணர்தலே அத்வைத அனுபவம் அவர் கூறும் முத்தி அத்வைத முத்தி சங்கரர் சீவன் முத்தி, விதேக முத்தி பற்றியும் குறிப்பிடுகின்றார் யாவும் பிரம்மத்தின் அம்சங்களே என்பதை உணர்கின்ற நிலையில் வேற்றுமைகள் நீங்கும்.

( 5+10+5 புள்ளிகள்)

04. அ) பல்லவர் காலம் பக்தி

கி.பி 6ம் நூற்றாண்டில் மகேந்திரவர்மன், மாமல்லன் இராஜசிம்மன், நந்தி வர்மன் போன்ற மன்னர்கள் சைவ, வைணவ மறுமலர்ச்சிக்கு ஆதரவு வழங்கினர். இதன் பயனாக பல்லவர் கால கட்டிடக்கலை பரிநாம வளர்ச்சிடைந்தது. கட்டிடக்கலையின் பல்வேறு பரிமான வளர்ச்சிக்கு அதரவு வழங்கினர். மிகுந்த ஈடுபாட்டுடன் திராவிடக் கட்டிடக்கலை வளர்ச்சியடைந்தது.

ஆ) பல்லவர் கால கோயிற் கட்டடக்கலை 4 வகையாக்கலாம்.

மகேந்திரவர்மன் பாணி

நரசிம்மன் பாணி

இராஜசிம்மன் பாணி

நந்திரவர்மன் பாணி

மற்றொரு கையில் குடைதளிகள் மலைதளி, கற்றளி என வகைப்படும்

குடை தளி

ஆரம்ப கட்டடமாக குகைகளைக் குடைந்தனர். இது மகேந்திரவர்மனால் ஆரம்பிக்கப்பட்டது. மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, மாமண்டூர் வல்லம், பல்லாவரம் போன்றன சான்றாகும். அடுத்த கட்டிட வளர்ச்சி மலைதளிகள், இரதக் கோயில், பாறைக் கோயில், செதுக்குத்தளிகள் என்பவை கூறுவர். பாறையை செதுக்கி அமைத்தனர். இதற்கு மாமல்லபுரத்தில் பஞ்சபாண்டவர் ரதம் சிறந்த எமுத்துக் காட்டாகும். இதில் தர்மராஜ ரதம் தனிச் சிறப்புடையது. சிற்பக்கலைக் களஞ்சியம் எனக் கூறுவர்.

கற்றளி முறை

கற்களை அடுக்கி அமைக்கப்படும் முறை இது இராஜசிம்ம மன்னுக்குரிய பாணியாகும். உதாரணம் மாமல்லபுரக் கடற்கரைக் கோயில் ஈஸ்வரன் கோயில், முகுந்தன் கோயில் பனைமலைக் கோயில் இதில் காஞ்சிபுரகைலாச நாதர் கோயில், பெரிய கற்றளி என அழைக்கப்படும் கட்டிடக்கலையின் முதிர்ச்சியை எமுத்துக் காட்டுகின்றது.

நந்தி வர்மன் கட்டிடக்கலைப்பிரிவு

காஞ்சி முத்தீஸ்வரர் கோயில்

மதங்கேஸ்வரர் கோயில்

திருத்தணி வீராட்டானேஸ்வரர் கோயில்

( 8+12 புள்ளிகள்)

05. அ) கர்ம யோகம் - தன்னலமற்ற உழைப்பின் வழி

பக்தி யோகம் - இறைவனிடம் தனியாக ஈடுபட்டு செல்லும் வழி தன்னலம் கருதாத அன்பு வழி

ஞான யோகம் - அறிவு வழி

ஆ) ஆறு பருவங்கல்

தாஸ்யம் - எஜமானுக்கும் வேலைக்காரனுக்குமிடையிலுள்ள மனப்பாங்கு

உதாரணம் ( அப்பர் சுவாமி )

சகியம் - தோழமை உறவு

உதாரணம் ( குலேசர் )

வாற்சல்யம் - குழந்தை மேல் தாய்க்குள்ள பாசம்

உ + ம் ( கோசலை )

சாந்தம் - குழந்தைக்கு தாய் மேல் உள்ள பாசம்

( துருவன் )

காந்தம் - மனைவி கணவன் மீது வைக்கும் அன்பு

( சீதை, இராமன் )

மதுரம் - காதலன், காதலிக்குள்ள உயர்ந்த காதல் உறவு. ( இராதை, கிருஷ்ணர்.)

இ) செயல் மூலம் இறைவனை அடைதல்

தன்னலமற்ற சேவை – (கதை)

செயலைச் செய்து விட்டு பலனை எதிர்பார்ப்பது பிறவிக்கு காரணம்

விடுவிக்கப்பட்ட செயலைச் செய்

பயன்கருதாது வினை முடிப்பவன் கருமபோதி

கடமையை கடமைக்காகவே செய்

செயலில் மட்டும் உரிமை உண்டு. அதன் பயனில் ஒரு போதும் உரிமை பாராட்டாதே.

“பற்றின்றி பெரு வினையாற்று” அவ்வாறு செயல் புரிபவன் வெற்றியை அடைகிறான். எனக் கண்ணன கூறுகிறாா.. கண்ணன் ஜனகன் போன்றோர் அவ்வழியில் நின்று முத்தியடைந்தோர்.

( 6+8+6 புள்ளிகள்)

06. அ) சைவ சித்தாந்தம் பதி உண்மைப் பொருள் என நிறுவுகின்றது. உ + ம் :- பானை

ஆகம, அனுமான பிரமாணத்தைக் கொண்டு நிறுவுகின்றனர். உலகைக் கொண்டு கடவுள் உண்டு என நிரூபிக்கின்றார். ஆன்மா செய்த வினையைச் சேர்ப்பிற்கு ஒருவர் வேண்டும். அது இறைவன் என கூறுகின்றனர். தேவார திருவாசக சைவசித்தாந்த சாஸ்திரங்கள் மூலம் உண்மை நிறுவப்படுகின்றது.

ஆ) இறைவனது இயல்புகள்
இறைவன் ஆதி அந்தமில்லாதவன் - அநாதியுமானவன்
இறைவன் அனைத்து உயிர் உலகத்திற்கும் தலைவன்
பதியே மேலான பொருள்
ஒரு நாமம் ஓர் உருவம் இல்லாதவர்
தத்துவங்களைக் கடந்தவர்
தத்துவங்களோடு பிரிந்தும் பிறப்பின்றியும் நிற்பவர்.
சொரூப நிலை – சிறப்பியல்பு
தடத்த நிலை – பொது வியல்பு
ஐந்தொழில், எண்குணம், மூவகைத் திருமேனி
சித்தாந்த சாஸ்திர நூல்களின் பாடல்களை உதாரணம் காட்டல்.

இ) இறைவனும் ஆன்மாவும்
முப்பொருள்களில் ஆன்மா "சதசத்து" எனப்படுகின்றார் இறைவன் உயிர்களுடன் ஒன்றாய் உடனாய் வேறாய் நிற்பான் கடந்த நிலையில் இறைவன் ஆற்றும் ஐந்தொழில் ஆன்மாவுக்குரிய பக்குவநிலையை ஏற்படுத்தி மலமந்தத்தை ஒழித்து வீடுபேற்றை அளிக்கும் சைவநாற்பாதம் கைகூட இறைவனது திருவருட்சக்தி அவசியம் திருவருள் வீடுபேற்றுக்கு உதவும் இதனால் இருவினை ஒப்பு, மலபரிகாசம், சக்தி நிபாதம் என்பவற்றிற்கு உதவும் இது தாடைலை எனப்படும்.

. ( 6+8+6 புள்ளிகள்)

07. அ) ஆத்திரேயா் - தன்வந்திரி, சரகர், சுஸ்ருதர்

ஆ) நெற்றியில் குட்டிக் கும்புடுதல் ( கட்டிக் கும்பிடல், நரம்பு மண்டலம், தூண்டப்படல்)
அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரம் - உடல் ஆரோக்கியம் தலையாத்திரை, கிரிவலம் - ஆலயம் வலம் வருதல் - (இடுப்பு, முழங்கால் பலமடைதல், குறுதிச் சுற்றோட்டம் சீரடைதல்).
அறுகு, துளசி, வில்வவழிபாடு – (மருத்துவக்குணம்)
சூரிய நமஸ்காரம் - பிராணாயாமம் - (நோய் தீர்த்தல்)
விரதம், சமயச் சின்னங்களைச் சூடல் - (உடல் நலம் பெறல் உடலில் நாடி, நரம்பு பலப்படைதல் நெற்றியில் பொட்டிடுவதால் சக்தி ஓடுருவி நன்மை பெறும்.)

இ) என்நாட்டவர்க்கும் ஏற்புடையது
எந்த வித பக்க விளைவும் அற்றது.
மேல்நாட்டு மருத்துவத்துறைக்கு ஆதாரமாக விளங்கும்
நோய்கள் ஏற்படாது பாதுகாக்கின்றது.
இயற்கையாகப் பெறமுடிவதால் நம்பிக்கையாகப் பயன்படுத்த முடிகின்றது.

( 4+10+6 புள்ளிகள் )

08. 1) இந்து போர்ட் சு.இராசரத்தினம்
பிறப்பு – 1884ஆம் ஆண்டு ஆடி மாதம் 04ம் திகதி
தாய் - மீனாட்சிப்பிள்ளை
தந்தை – கதிரேசு சுப்பிரமணியம்
கல்வி – ஆரம்பக்கல்வி – ஊர்காவற்றுறை கிறிஸ்தவ பாடசாலை
இடைநிலைக்கல்வி – யாழ் மத்திய கல்லூரி
உயர் கல்வி – கொழும்பு சட்டக்கல்லூரி
தொழில் - சட்டத்தரணி, சட்டசபை உறுப்பினர்
சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் முகாமையாளர்.
பணி – சமயப்பணி – சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கல்விப்பணி – சைவாசிரியர் கலாசாலை
சமூகப்பணி – சிறுவர் இல்லம் நிறுவுதல், பாடசாலைகள், குடிசைகள் கைத்தொழில்

2) சாங்கிய தரிசனம்
அறிமுகம்

மூன்று பிரமானங்கள், முக்கிய கோட்பாடு பிரகிருதி புருடன்
சாங்கிய யோக தத்துவங்களின் தொடர்பு
இந்து தத்துவ மரபில் அதன் முக்கியத்துவம் விளக்கப்பட வேண்டும்.

.

3) நடராஜர் வடிவம்
இலட்சணவிதி – அளவைப் பிரமானம்
பங்கம்
அலங்காரம்
ஆயுதம்
முத்திரைகள்
தத்துவம் - ஐந்தொழில் தத்துவம்
நடராஜர் வடிவம் தூல, சூக்கும பஞ்சாட்சரங்களுடன் தொடர்புடையது.

ந - திருவடி

ம – திருவயிறு

சி – திருத்தோள்

வா – திருமுகம்

ய - திருமுடி

சமூக, சமய முக்கியத்துவம்

சிவன் கோயிலில் காணப்படும்
சிற்ப விக்கிரக கலை, மார்கழித்திருவாதிரையுடன் தொடர்புடையது சைவ சித்தாந்தக் கோட்பாடுடன் தொடர்புடையது.

5) திருக்கோயில் வழிபாடு
கோயிலுக்குச் செல்லும் முறை கோயிலுக்குச் சென்றவுடன் செய்ய வேண்டியவை, ஆலயம் வழிபடும் முறைகள் இறுதியாக சண்டேஸ்வரரை வழிபட்டு பலன் பெறல் வழிபாட்டின் முடிவில் இறை பிரசாதம் பெற்று பேணல்.

6) திருக்கோணேச்சரம்
அமைவிடம் - திருகோணமலை
இறைவன் - திருக்கோணேச்சரநாதர்
இறைவி – மாதுமையம்பாள்
தீர்த்தம் - பாபநாசம்
விருட்சம் - கல்லாமரம்

மறுபெயர் - தென்கைலாயம், கோகர்ணம், திரிகூடம், மஸ்சேஸ்வரம்

இறைவனின் கதையுடன் தொடர்புற்றது, போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டது. தீர்த்தச் சிறப்பு ( பூசை, விழாக்கள்) நூல்கள்

7) சிவ சின்னங்கள்
சிவ சின்னங்கள் சைவசமயிக்கு உரிய அடையாளமாகும். திருநீறு, உருத்திராக்கம், திரிபுண்டரமாக அணிதல். தீட்சை பெற்றவர் திரிபுண்டலமாக அணிதல். திருநீற்றின் மகிமையை சம்பந்தரின் திருநீற்றுப் பதிகம் மூலமே அறியலாம். பாண்டியனின் வெப்பு நோய் நீக்கியமை மூலமும் அறியலாம். உருத்திராக்கம் என்பது சிவபெருமானின் கண்ணில் தோன்றியது அக்கமணி, கண்டிகை பாவம் போக்கவல்லது
“ஆரம் கண்டிகை அடையும் கந்தையே” என்று சேக்கிழார் பாடியுள்ளார். பெரியபுராணம் ஒருவர் சந்தியா வந்தனம், சிவமந்திரச் செபம், சிவபூசை, சிவத்தியானம் போன்ற காலங்களில் உருத்திராக்கம் அணிதல் அவசியம்.

( 5x4=20 புள்ளிகள் )

The National e-learning Portal for The General Education